செய்தி வெளியீடு எண்: 136 நாள்: 02.03.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2013 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கரூர் மாவட்டம், தாந்தோணியில் 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், 171 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 ஆயிரத்து 449 தொகுப்பு வீடுகள், 31 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 55 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், 150 பொது விநியோகக் கடை கட்டடங்கள், சமையல் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள், மகளிர் சுய உதவிக் குழு கூடங்கள், துணை சுகாதார நிலையக் கட்டடங்கள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் 9 பாலங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்களது கடமைகளை திறம்பட நிறைவேற்றி, சுய ஆட்சி அமைப்புகளாக செயல்பட உதவும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதில் ஒரு பகுதியாக, தமிழகத்தில் உள்ள பல்வேறு பழுதடைந்த ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 48 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 32 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்;

அரியலூர், கோயம்புத்தூர், தருமபுரி, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவள்ளூர், திருவாரூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 4 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 55 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள்;

மேலும், தமிழகத்தில் பாதுகாப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், தரமான கல்வி, அனைத்து காலங்களுக்கும் ஏற்ற சாலை உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், 5 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 150 பொது விநியோகக் கடை கட்டடங்கள், சமையல் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள், மகளிர் சுய உதவிக்குழுக் கூடங்கள், துணை சுகாதார நிலைய கட்டடங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் இதர கட்டடங்கள்;

104 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 ஆயிரத்து 449 தொகுப்பு வீடுகள்;

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 6 பாலங்கள், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தலா ஒரு பாலம், என 10 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 பாலங்கள்;

ஆக மொத்தம் 172 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தொகுப்பு வீடுகள், கட்டடங்கள் மற்றும் பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2013 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 2.3.2013